# 1

## ஓசன்னா! அல்லேலூயா!

Hosanna to Hallelujah!

குருத்தோலை ஞாயிறு முதல் உயிர்த்தெழுந்த ஞாயிறு வரை நடந்தவை ''தொழுகை'' பற்றி நமக்கு நிறைய கற்பிக்கின்றன.

### ஞாயிறு

***1. ''உன்னதத்தில் ஓசன்னா!''*** (மத் 21:9)

☐ எருசலேமிற்குள் வெற்றிப் பவனி செல்லக் காரணமாயிருந்தவர் இயேசுவே (மத் 21:1-3)

ஆராதிக்க நம்மைத் தூண்டுபவர் எப்பொழுதும் தேவனே —
சங் 51:15 ... *என் உதடுகளைத் திறந்தருளும் ... உமது புகழ்*
1 கொரி 12:3 ... *பரிசுத்த ஆவியினாலன்றி இயேசுவே கர்த்தரென்று ...*

ஆனாலும், தொழுவதால் நாம் அவருக்கு ஒன்றும் சேர்ப்பதில்லை (அப் 17:25)

அவரோடு நெருக்கவுறவு கொள்ள தொழுகை ஒரு வாய்ப்பு.

இறைவெளிப்பாடு எதுவும் ஆராதனைக்கு ஓர் அழைப்பு —
சக 9:9 vs. மத் 21:4,5
சங் 138:2 ... *தொழுது கொள்வேன் ... உமது வார்த்தை ...*

☐ ஆராதிப்பதில் சிறுவரை அசட்டை செய்யக்கூடாது —

மத் 21:15,16 ; சங் 8:2 ... *பாலகர் ... குழந்தைகள் ... துதி*
சத்தமாய் ஆர்ப்பரிக்க அவர்களை ஊக்குவிக்கவேண்டும்.
இது நமது ஆராதனைகளில் சடங்காச்சாரத்தைக் குறைத்து நறுமணத்தைக் கூட்டும்.

☐ *''குருத்தோலைகளை''* யோவான் மட்டுமே குறிப்பிடுகிறார் — யோ 12:12,13

வெளி 7:9,10உடன் ஒப்பிடுங்கள்.
கொண்டாட்டமாய்த் தேவனை ஆராதிப்பது பரலோக முன் ருசி தரும்!



### திங்கள்

***2. ''கோதுமை மணி சாகாவிட்டால் ...''*** (யோ 12:24)

☐ **ஆராதிக்க** வந்திருந்த கிரேக்கர் (யோ 12:20)

அவர்கள் இயேசுவைப் ''பார்க்க'' விரும்பினர்;
அவரோ அவர்கள் தம்மை ''ஆராதிக்க'' விரும்பினார் —

வச 23 ... *மனுமகன் மகிமைப்படும் வேளை*

மரணத்தின் மூலமாகவே மகிமைப்படுதல் (வச 24).
எனவேதான் பவுல் எழுதியது (1 கொரி 1:22,23),
*''கிரேக்கர் ... ஞானம் ... நாங்களோ சிலுவையிலறையப்பட்டவர்''*

☐ அதைத் தொடர்ந்து இயேசு ''சுயமறுப்பைப்'' பேசுகிறார் (யோ 12:25)

நமது தகுதியின்மையையும் தேவனது மகத்துவத்தையும் உணருவதே உண்மையான தொழுகை.
எக்கிரயமாயினும் அவரைப் பின்பற்றுவதே ஏற்புடைய ஆராதனை.

ஆபிரகாமுக்கு, ''தொழுகை'' என்பது தனது மகனைத் தகனபலியாக்குவதாம் (ஆதி 22:2,5)

☐ தன்னல மறுப்பு மற்றும் மரணம் குறித்துப் பேசுகையில், இயேசு தமது ஆத்தும வியாகுலத்தை வெளிப்படுத்தினார் —

யோ 12:27 ... *''என் ஆத்துமா கலங்குகிறது''*

கலக்கத்திலேயே தொய்ந்துபோகாதவாறு
அவர் தொழுகையில் மேலெழுந்தார் —

*''பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்''* (வச 28)

வியாகுல வேளைகளில் துதிக்கத் தோன்றாவிடினும் துதித்துக்கொண்டிருங்கள்.

*''பேக்கா''* எனும் அழுகையின் பள்ளத்தாக்கு *''பெராக்கா''* எனும் ஆசீர்வாதப் பள்ளத்தாக்காகும் (சங் 84:6; 2 நாளா 20:26)

## செவ்வாய்

### 3. *''தனக்கு இருந்ததையெல்லாம் போட்டுவிட்டாள்''* (மாற் 12:44)

☐ நமது உடைமைகளைக் கர்த்தருக்குக் கொடுத்துவிடுவது தொழுகையின் வெளிப்பாடாகும்.

மக்கள் எப்படிக் காணிக்கை போடுகிறார்கள் என்பதைப் பார்க்கவே இயேசு காணிக்கைப் பெட்டிக்கருகில் உட்கார்ந்திருந்தார் (வச 41).

எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல,
எவ்வளவு வைத்துக்கொள்ளுகிறோம் என்பதே தேவனது கணக்கு.

☐ மக்கெதோனியா விசுவாசிகள்:

2 கொரி 8:2 ... *தரித்திரம் ... உதாரத்துவம்*
*''தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தனர்''* (வச 5)
— சுத்தமான ஆராதனை!

இவ்விதம் கொடுப்பது தேவனுக்கு *''ஸ்தோத்திரங்களைப்''* பெருகச் செய்யும் (2 கொரி 9:11,12)

## செவ்வாய்

### 4. *''இந்த வீண் செலவு எதற்கு?''* (மத் 26:8)

☐ இயேசு மீது ஊற்றப்பட்ட மரியாளின் விலையுயர்ந்த தைலம் (மத் 26:6-13; மாற் 14:3-9; யோ 11:2)

சீமோனின் விருந்தாளிகளால் ''வீண்'' (waste) எனப்பட்ட செயல் பிரதம விருந்தாளியால் ''தொழுகை'' (worship) எனப்பட்டது!

☐ தேவனுக்குக் கொடுக்க விரும்புவதைத் தாமதிக்காதீர்.
இயேசுவின் உடலுக்குத் தைலம் பூச மரியாள் *முந்திக்கொண்டாள்* —
மாற் 14:8
மற்றவர்கள் பிந்திவிட்டனர் (லூக் 24:1 3)

புகழ்பெற்ற அகிலவுலகச் சுவிசேஷகர் பட்டியலில் மரியாளுக்கு இடம் கிடைத்தது (மத் 26:13).



## வியாழன்

### 5. *''என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்!''* (லூக் 22:19)

பார்க்க: மத் 26:26-29; மாற் 14:22-25; 1 கொரி 11:23-34

கர்த்தரது பந்தியில் குறைந்தது மூன்று விதங்களில் தேவனுக்குத் துதி செலுத்திக் கொண்டாடுகிறோம் —

☐ கர்த்தரது பிராயச்சித்த மரணத்திற்காய் அவரைத் துதிக்கிறோம்
1 கொரி 11:24-26

நமது பாவங்கள், ரோகங்களைத் தமது சரீரத்தில் சுமந்தார்.
ஏசா 53:4,5; 1 பேது 2:24

நம்மைத் தேவனிடம் கொண்டுவரத் தமது இரத்தத்தைச் சிந்தினார்.
எபே 2:13; எபி 10:19,20

நம்முடன் புது உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.
எபி 8:10-12 ... *பாவங்கள் இனி நினைக்கப்படுவதில்லை*

☐ கர்த்தரது சரீரமாம் அவரது சபைக்காய் அவரைத் துதிக்கிறோம்.
1 கொரி 11:29

ஒருவரையொருவர் கரிசனையுடன் கவனிக்கவேண்டும் (வச 33,34)
ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தின் முன் ருசியே கர்த்தரின் பந்தியாகும் (வெளி 19:9; மத் 26:29)

☐ சீக்கிரம் வரவிருக்கும் இராஜாவாய்க் கர்த்தரைத் துதிக்கிறோம்.
1 கொரி 11:26ஆ
கர்த்தருடைய பந்தி ... சத்துருக்கள்மீது வெற்றி

இப்படி, கர்த்தருடைய பந்தியில்,
நாம் கிறிஸ்துவை ஆராதிக்கும் கோணங்கள் —

தேவ ஆட்டுக்குட்டியானவராக ...
திருச்சபையின் ஆண்டவராக ...
நாடுகளின் ஆண்டவராக ...

**வெள்ளி**

6. ***''பிதாவே, உமது கைகளில் ...''*** (லூக் 23:46)

☐ பரலோகம் விட்டுப் பூவுலகம் வரும்போது இயேசு சொன்ன
பிரிவு வார்த்தைகளின் நிறைவேறுதல் —
எபி 10:5-7 ... *பலி ... ஒரு சரீரம் ...*

☐ நாம் நமது உடல்களை ஒப்புக்கொடுக்கவேண்டும் —
ரோ 12:1 ... *உயிருள்ள பலி*

கிறிஸ்துவின் மரணம் போதிக்கும் உன்னதப் படிப்பினை (எபே 5:1,2)

பாவத்திற்கு மரித்து தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாக
நாம் எண்ணியவாறு இருக்கவேண்டும் — ரோ 6:11

அப்படியானால் ஒவ்வொரு நாளும் பெரிய கிழமைதான் —
பெரிய ஞாயிறு ... பெரிய திங்கள் ... பெரிய வெள்ளி ...

**ஞாயிறு**

*7. **''அல்லேலூயா! அவர் உயிர்த்தெழுந்தார்!''*** (மத் 28:6)

உயிர்த்தெழுதலினாலே இயேசு
*''ஆண்டவரும் ... கிறிஸ்துவும்''* ஆக்கப்பட்டார் (அப் 2:36)
தொழுகைக்கு என்னவொரு மகிமையான கருத்து!

— தொழுகையின் வெளிப்பாடுகள் (Adoration)
மத் 28:9 ... *பாதங்களைத் தழுவிப் பணிந்துகொண்டனர்*

— பாசத்தின் வெளிப்பாடுகள் (Affection)
யோ 20:15-17 ... *ரபூனி ... தொட்டுப் பிடிக்க முயன்றாள்*

— பிரமிப்பின் வெளிப்பாடுகள் (Amazement)
யோ 20:27,28 ... தோமா ... *என் ஆண்டவரே, என் தேவனே!*

உயிர்த்தெழுதல் நமது இதயத்தை மகிழச்செய்து உதடுகளைக்
கெம்பீரிக்கச் செய்கிறது (அப் 2:24-28)

*உயிர்த்தெழுந்தாரே, அல்லேலூயா,*
*ஜெயித்தெழுந்தாரே!*
*உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென்*
*சொந்தமானாரே!*